# பெருங்கடுங்கோ நுவலும் பாலை நிலப் பண்பாடு

***முனைவர் ம. தேவி***
தமிழ்த்துறைத் தலைவர்
ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குரும்பபாளையம், கோவை
https://doi.org/10.5281/zenodo.14383341

**முன்னுரை**

*பண்பாடு என்பது வரலாறு, பண்புகள், புரிந்துணர்வுகள், வாழ்வியல் நெறிமுறைகளை உள்ளடக்கியது ஆகும். உணவு, இசை, மொழி, தொழிற்சார்கூறுகள், சமயம், நம்பிக்கைகள் ஆகியவை பண்பாட்டுக்குள்அடங்கும். பொதுவாக, பண்பாடு என்பது மனித இனத்தின் செயல் பாடுகளை குறிப்பதாக அமைகின்றது. பண்பாடு என்பது மூன்று மூலகங்களை உள்ளடக்கியதாகும். அவை, பெறுமானம் (எண்ணங்கள்), நெறிமுறைகள் (நடத்தை), மற்றும் பொருட்கள் (அல்லது பொருள்சார் பண்பாடு) என்பவை ஆகும்.*

*வாழ்வில் முக்கியமானது எது என்பது பற்றிய எண்ணங்களே பெறுமானம் ஆகும். அவை பண்பாட்டின் ஏனைய கூறுகளை வழிநடத்துகின்றன. நெறிமுறைகள் என்பன, வெவ்வேறு நேரங்களில் மக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதாகும். ஒவ்வொரு பண்பாட்டுக் குழுவும் இந்தப் பொது வழக்கங்களை நடைமுறைப் படுத்துவதற்கான வழிமுறைகளைக் கொண்டுள்ளது. சமூகம் நடைமுறைப் படுத்தும் இந்த நெறிமுறைகள் விதிகள் அல்லது சட்டங்கள் எனப் பொதுவாக வழங்கப் படுகின்றன. மூன்றாவதான பொருள்கள் என்பது, பண்பாட்டின் பெறுமானங்கள் மற்றும் நெறிமுறைகள் ஆகியவற்றிலிருந்து பெறப் படுகின்றது. மேற்கண்ட வரையறைக்கு ஏற்ப பெருங்கடுங்கோ பாடல்களில் இடம் பெற்றுள்ள பாலை நிலப் பண்பாடு குறித்த செய்திகளை அடிக்கோடிட்டுக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.*

**பாலை நிலம்**

*பாலை நிலம் என்பதற்கு உரிய வரையறையை நில இயல்பை முதலில் சிலப்பதிகாரக் காப்பியமே நமக்கு வழங்குகிறது. இதனை, முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து / நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப் / பாலை என்பதோர் படிவம் கொள்ளும் (சிலப்பதிகாரம்: காடுகாண். 65) என்ற சிலப்பதிகார அடிகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். பாலை நில உரிப்பொருளான பிரிதலும் பிரிதல் நிமித்தத்தம் சார்ந்து பாலை நிலப் பண்பாட்டைஅறிந்துகொள்ளமுடிகிறது. தலைவன்தலைவியை பொருள்ஈட்டக்கருதிப் பிரிதல், அதனைத் தோழிவாயிலாக தெரிவித்தல், தலைவி வருந்தி பிரிவுக்கு உடன்படாது இருத்தல் போன்ற நிகழ்வுகளோடு சங்க இலக்கியப் புலவர்கள் பாலை நிலப் பண்பாட்டையும் தமது பாடல்களில் ஆங்காங்கே அள்ளித் தெளித்துள்ளனர். இவை அனைத்தும் சங்கத் தமிழரின் பண்பாடு சார்ந்த தரவுகள் ஆகும்.*

**ஈயாமையின் இழிவு**

*தலைவன் பொருள் ஈட்டக் கருதி தலைவியைப் பிரிதல், பாலை நிலத்தில் இயல்பாக நடைபெறும் நிகழ்வுகளில் ஒன்று ஆகும். பெருங்கெடுங்கோ, அதற்குரிய காரணத்தை பண்பாட்டு நோக்கில் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார். தம்முடைய இல்வாழ்க்கைக்கு வேண்டும்பொருள்இல்லை என்று கூறி வந்து இரந்தவர்க்கு சிறிதும் கொடாது இருத்தல் வாழ்வின் மிகப்பெரிய*

*இழிசெயல் ஆகும் என்பதற்காகவே, நாட்டைக் கடந்து பொருள் தேடலை நடத்த பாலைத் தலைவன் கிளம்புகிறான் என்று கூறியுள்ளார். இதனை,*

***இல் என இரந்தோர்க்கு ஒன்று இயலாமை இழிவு***
***(பாலைக்கலி பா. எ 2;15)***

*எனும் பாடல் வரிகளில் எடுத்துக்கூறியுள்ளார். இது பண்பாட்டு மூலகங்களான நெறிமுறைகள் (நடத்தை), மற்றும் பொருட்கள் (அல்லது பொருள்சார் பண்பாடு) ஆகியவற்றைக் குறிப்பதாக அமைகிறது.*

**விருந்தோம்பல்**

*பண்டைத் தமிழர்கள் சுவை மிக்க உணவுப் பொருள்களைச் சமைப்பதில் தேர்ந்திருந்தனர். அவரவர் வாழ்ந்த நிலத்திற்கு ஏற்ப உணவு வேறுபட்டது. அவரவரின் பொருளாதார நிலைமையை ஒட்டியும் உணவில் தரம் வேறுபட்டிருக்கும் என்பதிலும் ஐயமில்லை. மரக்கறி உணவோடு புலால் உணவும் பெரிதும் விரும்பி உண்ணப்பட்டது. மன்னர்கள் இரவலர் அளித்த விருந்துகளில் புலால் உணவே பரிமாறப்பட்டது என அறிகிறோம். (தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.121) என்ற அ. தட்சிணாமூர்த்தி அவர்களின் கருத்து தமிழர்களின் உணவு சார்ந்த பல்வேறு செய்திகளை நமக்கு விளக்குவதோடு விருந்தோம்பலில் இடம் பெற்ற உணவுவகை பற்றிய செய்திகளையும் நமக்கு விளக்குகிறது. கிறது. தன் இல்லத்திற்கு வரும் விருந்தினர்களை நல்ல முறையில் கவனித்தல் இல்லத்தார்களின் கடன் ஆகையால் பாலை நில மக்கள் விருந்தோம்பலிலும் ஈடுபட்டுள்ளனர் என்ற செய்தியை பெருங்கடுங்கோ தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். இதை,*

***மன்னவன் புறந்தர வருவிருந்து ஓம்பி***
***(பாலைக்கலி பா.எ: 8; 21)***

*எனும் அடிகள் எடுத்துக்காட்டுவ தாய் அமைந்துள்ளன. இதே கருத்தை,*

***வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை***
***பருவந்து பாழ்படுதல் இன்று (திருக்குறள்- 83)***

*என்று வள்ளுவப் பெருந்தகையும் நம்மை நினைவு கூற வைக்கிறார்.*

*விருந்து போற்றுதல் தமிழரின் பண்பு என்பதை மீண்டும் மீண்டும் தம் வரிகளில் எடுத்து இயம்பி உள்ளார் பெருங்கடுங்கோ. இளவேனிற்காலம் பாலை நில மக்களுக்குப் பொற்காலம். அவர்கள் தம் வாழ்வை மகிழ்வாக கொண்டாடும் காலம் அது. அக்காலத்தின் வருகைக்கும் விருந்து போற்றியுள்ளனர். இதை,*

***தூது வந்தன்றே, தோழி! / துயர் அறு கிளவியோடு;***
***அயர்ந்தீகம் விருந்தே.***
***(பாலைக்கலி பா.எ.32;.18-19)***

*எனும் அடிகள் வழி அறிய முடிகின்றது.*

**பாலை நில மக்களின் தொழில் கூறுகள்**

*பாலை நிலத்தலைவர்கள் பொருள் தேட செல்லும் பொழுது, வில், அம்பு, திகிரி ஆகிய ஆயுதங்களை எடுத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் என்ற செய்தியையும், விலங்குகளிலிருந்து தம்மை காப்பாற்றிக் கொள்வதற்காக ஆயுதங்களை ஏந்திச் செல்வர் என்ற செய்தியையும் பெருங்கடுங்கோ கலித்தொகையில் எடுத்துக்காட்டியுள்ளார். இதனை, கைபுனை வல்வில் ஞாண் உளர்தீயே; (பாலைக்கலி பா.எ.7; 6) என்ற அடியும், புனைமாண் மரீஇய அம்பு தெரிதியே; (பாலைக்கலி பா.எ 7: 10) என்ற அடியும், வலம்படு திகிரி வாய் நீவுதியே; (பாலைக்கலி பா.எ7; 14) என்ற அடியும் எடுத்து இயம்புகின்றன. மழவர், ஆறலைக்கள்வர் போன்றவர்களின் கொலைத்தொழிலை ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். மழவர்கள் வில்லைக் கருவியாக உடையவர்கள். அவர்களது தொழில் பாலை நிலத்தில் வருவோரிடம் உள்ள பொருளை கொள்ளையிடுதல் ஆகும்.*

**இசைக் குறிப்பு**

*பாலை நில மக்கள் இசையின்பால் ஈடுபாடு கொண்டவர்கள் என்பதை யாழ் எனும் கருவியின் வழி அறிய முடிகின்றது. யாழில் ஏழு நரம்புகளை கட்டி வாசித்துள்ளனர் என்ற செய்தி கலித்தொகைப் பாலையில் இடம்பெற்றுள்ளது. இதை,*

***வீழுநர்க்கு இறைச்சியாய் விரல் கவர்பு இசைக்கும் கோல்***
***ஏழும்தம் பயன்கெட இடை நின்ற நரம்பு அறுஉம்***
***யாழினினும் நிலை இல்லாப் பொருளையும்***
***(பாலைக்கலி பா.எ 8; 9-4)***

*எனும் அடிகளில் காண முடிகின்றது. கொடுமையான கொலைத் தொழிலை செய்யும் பாலை நில மக்கள் அவ்வியல்பின் மாறாக கலைகளின் மீதும் நாட்டம் கொண்டு இருந்தனர் என்பது நிலவியல் பண்பாட்டின் அடிப்படைக் கூறாகவே அமைந்துள்ளது.*

**நிமித்தம் பார்த்தல்**

*நிமித்தம் பார்த்தல் என்பது மக்களின் வாழ்க்கையோடு ஒட்டி வரும் நம்பிக்கை. இது சங்க இலக்கியங்களில் பரவலாக பேசப்பட்டுள்ளது. நிமித்தம் பார்த்தல் தொல்காப்பியம் காலம் தொட்டே இருந்து வருகின்றது.*

***மன்னும் நிமித்தம் (தொல் நூ.982)***
***நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்***
***(தொல் :நூற் ;1087)***

*என்ற தொல்காப்பியரின் நூற்பாக்கள் வழிநாம் அறியலாம். பெண்களுக்கு இடக்கண்ணும், ஆண்களுக்கு வலக்கண்ணும் துடித்தல் நன்நிமித்தமாகும். மாறி துடித்தால் தீமித்தமாகும் என்ற செய்தி சங்க இலக்கியங்களில் காட்டப்பட்டுள்ளது. பல்லி ஒலிக்கும் ஒலியையும் நிமித்தமாக கொண்டு வாழ்ந்தனர் பாலை நில மக்கள். அதுவும் நல்ல இடத்தில் ஒலித்தால் மட்டுமே நன்நிமித்தம் என்பதாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர். மேற்கண்ட செய்தியை,*

***பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன***
***பல் எழில் உண்கணும் ஆடுமால் இடனே***
***(பாலைக்கலி பா.எ 11; 21-22)***

*என்ற அடிகளின் மூலம் நன்கு அறியலாம். இதே செய்தியை, ஓங்கிய நல்லில் ஒருசில நிலைஇப் பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவி (அக நானூறு - 9) என்று அகநானூறும்,*

***கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்***
***உண்ணிறை கரந்து அகத்தொளித்து நீருகுத்தன***
***எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன***
***(சிலம்பு. பா.எ 5)***

*என்று சிலப்பதிகாரமும் புலப்படுத்தியுள்ளன.*

**வழிபாடுகள்**

*தெய்வம், கடவுள் பற்றிய கோட்பாடு தொல்காப்பியம் காலம் தொட்டு இருந்து வருகிறது. நிலத்தை கூறும் பொழுது தெய்வத்தையும் இணைத்தே கூறியுள்ளனர். பாலை நில மக்களின் தெய்வ வழிபாடு ஆதி கால மனிதனின் இயற்கை வழிபாட்டை ஒட்டியே அமைந்துள்ளது. பொருள் தேடிச் சென்ற தலைமகன் தீதின்றி பொருள் தேடி திரும்பி வரவேண்டும். அவ்வாறு அவன் திரும்பி வர எந்த கடவுளை வழிபட்டால் நன்மை கிடைக்கும் என்று தலைவி எண்ணுவதாக வரும் பாடலில் வழிபாட்டை எடுத்துக்காட்டியுள்ளார் ஆசிரியர்.*

*மேகத்திற்கான கடவுளை வேண்டலாமா? அல்லது ஞாயிற்றை வேண்டலாமா ? அல்லது காற்றுக் கடவுளை வேண்டலாமா? என்று தலைவி எண்ணிக் கொண்டு, இவ்வாறு கடவுள்களை எல்லாம் வேண்டினால் எனது கற்பின் அறம் கேள்விக்குள்ளாகுமே! என்று எண்ணி வருந்துவதாக ஒரு செய்தியை காட்டியுள்ளார் பெருங்கடுங்கோ. இதை,*

***தெய்வத்து திறன் நோக்கி, தெருமரல் -தேமொழி!***
***(பாலைக்கலி பா.எ 16; 20)***

*மரங்களை வழிபடும் செய்தியும், கலித்தொகைப் பாலையில் காட்டப் பட்டுள்ளது. மரங்கள் பூத்து நின்றலுக்கு தெய்வங்கள் உவமையாக்கப்பட்டதிலிருந்து மரங்களை வழிபடும் பண்பாட்டுக் கூறு சங்க கால மக்களிடம் உண்டு என்பது புலனாகிறது. வெண்கடம்பு, செருந்தி, காஞ்சி, ஞாழல், இலவம் போன்ற மரங்களை கடவுளாக வழிபட்டுள்ளனர். இதை,*

***ஒரு குலை ஒருவன் போல், இணர் சேர்ந்த மராஅமும்,***
***பருதிஅம் செல்வன் போல், நனை ஊழ்த்த செருந்தியும்***
***(பாலைக்கலி பா.எ 26; 1)***

*என்ற வரிகள் உறுதிப்படுத்துகின்றன.*

*ஒருதெய்வ வழிபாடு என்பது பாலை வனத்தில் தோன்றிய மதங்களின் தனிப் பண்பாக இருக்க, இயற்கை வெவ்வேறு விதமாகவும் மிதமிஞ்சிய வளத்துடனும்*

*இருக்குமிடங்களின் தனிப்பண்பாகப் பலதெய்வ வழிபாட்டுமுறை இருக்கக் காண்கிறோம். பரந்த இமயமலைத் தொடர், கடற்கரைகள் எல்லையிடாத, தொடுவானமே காணாதது போன்ற, பேராறுகள் பாய்கின்ற, மிகப் பரந்து விரிந்த சமவெளிகள், பல்வேறு உயிரினங்கள் வாழும் நிலநடுக்கோட்டுக் காடுகள் -ஆகிய இயற்கைக் காரணிகளே வேதக்கவிதைகளின் எழுச்சிக்கும் அந்தக் கவிதைகள் வெளிப்படுத்தும் வியப்புணர்ச்சிக்கும், எல்லையற்ற தன்மையின் பேருணர்விற்கும் தூண்டுதலாக இருந்தன என்ற கருத்தும் நிலவுகிறது.அக்காலமனிதன்எல்லாத்திசைகளிலும் சமச்சீரான முடிவற்ற உணர்வைச் சந்திக்க வேண்டியிருந்தது; அது அவனை விழுங்குவதாகத் தோற்றம் கொண்டது; எனவே தியானம், ஆனந்தம் வாயிலாக எல்லையற்ற முடிவிலிக்குள் தான் உறிஞ்சப் பட விட்டுவிடுவதைத் தவிர ஒருவனுக்கு வேறு வழியேதும் இல்லை (நில அமைப்பு தமிழ்க் கவிதையும் ப. 2) என்ற தனிநாயகம் அடிகளாரின் அவர்களின் கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.*

## இளவேனிற் காலத்து விழாக்கள்

*இளவேனிற் காலத்தில் வைகையில் நீராடுதலை பரிபாடல் சுட்டும். நீரற்ற இளவேனிற் காலத்தில் மடுக்களில் பாலை நில மக்கள் நீராடி மகிழ்ந்ததை காட்டியுள்ளார் ஆசிரியர். இதை,*

> **"துயில் இன்றியாம் நீந்த ,தொழுவை அம்புனல் ஆடி,"**
> ***(பாலைக்கலி பா.எ 30; வ.எ.5)***

*இளவேனிற் காலம் மன்மதனுக்கு உரிய காலமாகும். இக்காலத்தில் மன்மதனுக்கு விழா எடுக்கும் பழக்கத்தை பாலை நில மக்கள் கடைபிடித்துள்ளனர். காதலுடையவர்கள் திருப்பரங்குன்றத்தில் விளையாடியதும், வைகையில் நீராடி மகிழ்ந்ததும் காட்டப்பட்டுள்ளது. இதை,*

> ***காமவேள் விழாவாயின், "கலங்குவள் பெரிது" என***
> ***(பாலைக்கலி பா.எ 27; 24)***

> ***உறல் யாம் ஒளிவாட, உயர்ந்தவன் விழவினுள்***
> ***(பாலைக்கலி பா.எ 30; 13)***

*என்ற பாடல் அடிகளின் வழி புலனாகிறது.*

## முடிவுரை

*கலித்தொகையின் பாலை நிலப்பாடல்களில் ஆசிரியர் பெருங்கடுங்கோ காட்சிப்படுத்தியுள்ள நிலவியலையும் அது சார்ந்த பண்பாட்டுக் கூறுகளையும் காட்சிப் படுத்துவதாக இக்கட்டுரை அமைந்தது. பாலை நில மக்கள் இல்வாழ்க்கையில் மற்றவர்களுக்கு உதவி வாழ வேண்டும் என்ற பண்பைக் கொண்டு வாழ்ந்தவர்கள் என்பதும், விருந்தோம்பல் பண்பாட்டில் சிறந்தவர்கள் என்பதும் புலப் படுத்தப்பட்டது. பொருள்தேடச் செல்லும் தலைவன் வழியில் விலங்குகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஆயுதங்களுடன் சென்றான் என்ற செய்தி பாலை நில இயல்பை விளக்குவதாக அமைந்துள்ளது. இசையறிவுடையவர்களாக பாலை நிலமக்கள் இருந்துள்ளனர் என்பதும் அதன் வழியாக அவர்கள் பொழுது போக்கினர் என்பதும் இங்கு குறிப்பிடத்தககதாகும். பாலை நில மக்கள் நிமித்தம் பார்க்கும் வழக்கத்தை கொண்டிருந்தனர் என்பதும் அது சார்ந்த சில பதிவுகளும் மக்களின் நிலவியல் சார்ந்த பண்பாட்டுப் பிரதிபலிப்பாக அமைந்துள்ளன. மரங்களை வழிபட்டதன் வழி அவர்கள் இயற்கையை வழிபட்டு வாழ்ந்தவர்கள் என்பதும் கடவுள் நம்பிக்கை உடையவர்கள் என்பதும் எடுத்துக் காட்டப்பட்டது. அவர்கள் கொண்டாடிய இளவேனிற் காலத்து விழாக்கள் பற்றி எடுத்துக் கூறப்பட்டது. இது போன்ற நிலவியல் சார்ந்த பதிவுகளும் மக்களின் பண்பாடும் தற்கால ஆய்வுலகில் கவனம்பெறும்தலைப்புகளாகஅமைகின்றன. இவை அனைத்திற்கும் அந்தந்த நிலத்தின் கரு, உரிப்பொருட்கள் அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன என்பது இதன் மூலம் புலனாகிறது. இவை அனைத்தும் மேலும் விரிவான ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியவை ஆகும்.*

**ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட நூல்கள்**


1. *சுப்பிரமணியன், ச.வே.சங்க இலக்கியம் (மூலம் முழுவதும்) (2006), மணிவாசகர் வெளியீடு, சென்னை.*
2. *தட்சிணாமூர்த்தி, அ,(2008), தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, அண்ணா நகர் சென்னை.*
3. *பூரணச்சந்திரன், க. (மொ), (2014), நிலஅமைப்பும் தமிழ்க்கவிதையும் (செவ்வியல் தமிழ்க்கவிதையில் இயற்கை பற்றியதோர் ஆய்வு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை.*